**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | STC. 11 of 2019 |
| Prosecution Witness | : | DW1 |

03.05.2024.

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : கார்த்திக் | Caste | : | |
| Father Name | : ராஜேந்திரன் | Calling | : | வங்கி கிளை உதவி மேலாளர் |
| Village | : துறையூர் | Religion | : | |
| Taluk | : துறையூர் | Age | : | 32 |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது துறையூர் இந்தியன் வங்கியில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை பெற்று சாட்சி சொல்ல வந்துள்ளேன். புகார்தாரர் சண்முகம் மேற்படி வங்கியில் 2011ம் வருடம் முதல் கணக்கு வைத்துள்ளார். எங்களது வங்கியில் செலுத்தப்படும் வேறு ஒரு வங்கியின் காசோலை எத்தனை நாட்களில் பரிசீலனை செய்து விவரம் தெரிவிக்கப்படும் என்றால் குறைந்தது 1 வாரம் ஆகும். 2022ம் வருடம் வரை எங்களது வங்கியில் மேற்படி நடைமுறை Manual ஆக நடைபெற்றது. புகார்தாரர் எந்த தேதியில் எங்கள் வங்கியில் காசோலையை செலுத்தினார் என்றால் புகார்தாரரின் கணக்கு அறிக்கையில் மேற்படி காசோலை செலுத்தப்பட்ட விவரம் தெரிவிக்கப்படாது. காசோலை பணமாக்கப்படாமல் திருப்பப்பட்ட வங்கி குறிப்பாணையில் காசோலை செலுத்தப்பட்ட நாள் 10.10.2018 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2. மேற்படி திருப்பப்பட்ட விபரம் குறுஞ்செய்தி வழியாக அனுப்பமாட்டோம். வாடிக்கையாளருக்கு தொலைபேசி மூலம் தெரிவித்து அவர் திருப்பப்பட்ட காசோலை மற்றும் குறிப்பாணையை பெற்றுசெல்வார். காசோலைக்குண்டான தொலை இல்லை என்று தெரிந்தவுடன் காசோலை யாரால் கொடுக்கப்பட்டதோ அவருடைய வங்கி கணக்கிலிருந்து அதற்கான Charge

பெறப்படும். புகார்தாரர் சண்முகத்தின் வங்கி அறிக்கை 01.01.2018- 31.12.2018 வரை எவ்வளவு வரவு செலவு உள்ளது என்றால் வரவு ரூ.17405, செலவு 17180 ஆகும். திருப்பப்பட்ட குறிப்பாணை புகார்தாரரால் 13.11.2018 அன்று பெறப்பட்டது. மேற்படி நடைமுறை Manual ஆக நடைபெற்றது. மேற்படி Manual நடைமுறையில் திருப்பப்பட்ட குறிப்பாணை 7 நாட்களில் கொடுக்கப்படவேண்டும் என்றால் எல்லா நடைமுறையும் சரியான முறையில் இருந்தால் 7 நாட்கள் ஆகும். மற்ற காசோலைகளில் நாட்கள் அதிகமாகலாம். 10.10.2018 அன்று செலுத்தப்பட்ட காசோலை 11.10.2018 அன்றே திருப்பப்பட்டுள்ளது. ஆனால் புகார்தாரர் 13.11.2018 அன்று திருப்பப்பட்ட குறிப்பாணையை பெற்றுள்ளார். மேற்படி குறிப்பாணை காலதாமதமாக பெறப்பட்டதற்கு புகார்தாரர் காரணம் தெரிவிக்கப்படவில்லை. மேற்படி ஒரு மாதம் காலதாமதமாக குறிப்பாணை பெறப்பட்டதில் எங்களுடைய குறைபாடு இல்லை.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

10.10.2018 அன்று செலுத்தப்பட்ட காசோலை 11.10.2018 அன்றே திருப்பப்பட்ட விவரம் புகார்தாரருக்கு அன்றைய தினமே தெரிவிக்கப்பட்டதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. போன் மூலம் தெரிவிக்கப்படும். மேற்படி போன் மூலம் தெரிவிக்கப்பட்டதற்கு ஆதாரம் இருக்க வாய்ப்பு இல்லை.

உண்மை நகல்

ஒம்/-அ.நர்மதாராணி,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
துறையூர்.